உடுமலை அரசு கல்லூரியில் விளையாட்டு விழா

உடுமலை, ஏப்.4: உடுமலை அரசு கலைக் கல்லூரியில் விளையாட்டு விழா நேற்று நடந்தது. சிறப்பு விருந்தினராக மடத்துக்குளம் களரி பயிற்றுனர் வீரமணி கலந்து கொண்டார். முனைவர் அலி பாத்திமா வரவேற்றார்.

விளையாட்டு துறை அறிக்கையினை உடற்கல்வி இயக்குனர் மனோகர் செந்தூர் பாண்டி வாசித்தார். கல்லூரி முதல்வர் சிவகுமார் தலைமை உரை ஆற்றினார். விளையாட்டுத்துறை செயலாளர்கள் மாணவர் சேகுவாரா மற்றும் மாணவி ஜீவதர்ஷினி நன்றி கூறினர்.

மாணவ -மாணவிகளுக்கு 245 பரிசுகளும், 32 சிறப்பு பரிசுகளும் வழங்கப்பட்டன. குழு விளையாட்டில் ஒட்டு மொத்த சாம்பியன் பட்டத்தை ஸ்பீடு மேஸ்ட்ரோ அணியும் ஆண்கள் பிரிவில் ஸ்டெரன்த் மயிலோ அணியும் பெற்றனர்.

தடகள விளையாட்டு பிரிவில் ஒட்டுமொத்த சாமியின் பட்டத்தை ஆண்கள் பிரிவில் ஸ்டாமினாரன்னர்ஸ் அணியும், பெண்கள் பிரிவில் ஸ்பீட் மேஸ்ட்ரோ அணியும் பெற்றனர். முதலாம் வருட ஆங்கில துறை மாணவர் பாஸ்கர் தனிநபர் பிரிவில் சாம்பியன் பட்டத்தையும், பிகாம் சிஏ முதல் வருட மாணவி பெரியநாயகி தனிநபர் பெண்கள் பிரிவில் சாம்பியன் படத்தையும் பெற்றனர்.

▶ உடுமலை அரசு கல்லூரி விளையாட்டு விழாவில் பரிசுகள் பெற்ற மாணவ, மாணவிகளுடன் சிறப்பு விருந்தினர் மற்றும் பள்ளி நிர்வாகிகள்.

அவிநாசியில்

லாரி மீது கார் மோதி விபத்து கல்லூரி மாணவர் 5 பேர் படுகாயம்

அவிநாசி, ஏப். 4: நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோடு பகுதியைச் சேர்ந்த வர்ஷன் (21), நிதிஷ் (19), சங்கமேஸ் (20), வருன்ராஜ் (20), மற்றும் மாணவி மிருதுளா (19) உள்ளிட்ட 5 பேரும் கோவையில் உள்ள தனியார் கல்லூரியில் படித்து வருகின்றனர். நேற்று கல்லூரி விடுமுறை என்பதால் இவர்கள் 5 பேரும் நேற்று இரவு கோவையில் இருந்து அவிநாசி வழியாக சொந்த ஊருக்கு சென்றுள்ளனர். காரை வர்ஷன் ஓட்டி வந்தார்.

அவிநாசி வேலாயுதம் பாளையம் பிரிவு அருகே வந்தபோது முன்னாள் சென்ற லாரியின் பின்புறமாக கார் எதிர்பாராத விதமாக மோதி விபத்து ஏற்பட்டது. இந்த விபத்தில் கார் அப்பளமாக நொறுங்கியது. இதில் படுகாயமடைந்த 5 பேரும் திருமுருகன்பூண்டி தனியார் மருத்துவமனையில் தீவிர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றனர். இது தொடர்பாக அவிநாசி போலீசார் வழக்கு பதிந்து விசாரித்து வருகின்றனர்.

▶ அவிநாசி பைபாஸ் ரோடு மேம்பாலத்தில் நடந்த விபத்தில் அப்பளமாக நொறுங்கி கிடக்கும் கார்.

பனியன் தொழிலாளியிடம்

கத்தியை காட்டி செல்போன் பறித்தவருக்கு 3 ஆண்டு சிறை

திருப்பூர், ஏப்.4: திருப்பூர் பனியன் தொழிலாளியிடம் கத்தியை காட்டி மிரட்டி செல்போன் பறித்தவருக்கு 3 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதித்து நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. திருப்பூர், பி.என். ரோட்டை சேர்ந்தவர் ரமேஷ் (32). பனியன் நிறுவன தொழிலாளியான இவர் கடந்த 03.08.2017 அன்று குமார் நகர் 60 அடி ரோட்டில் நடந்து சென்றுள்ளார். அப்போது அங்கு வந்த ஒருவர் ரமேசிடம் கத்தியை காட்டி மிரட்டி அவருடைய செல்போனை பறித்து சென்றுவிட்டார். இது குறித்து ரமேஷ் அளித்த புகாரின் பேரில் வடக்கு குற்றப்பிரிவு போலீசார் வழக்குப்பதிந்து பூபதி (எ) பூபதிராஜ்(43) கைது செய்து சிறையிலடைத்தனர்.

இந்த வழக்கு விசாரணை 1வது குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் நடைபெற்று வந்தது. இந்த வழக்கில் நேற்று தீர்ப்பு கூறப்பட்டது. இதில் பூபதி (எ) பூபதிராஜுக்கு 3 ஆண்டு சிறை தண்டனை விதித்து நீதித்துறை நடுவர் செந்தில்ராஜா தீர்ப்பளித்தார். இந்த வழக்கில் அரசு வழக்கறிஞர் ஹேமா மகேஸ்வரி ஆஜராகி வாதாடினார்.

பாத்திர உற்பத்தி தொழிலாளர்களுக்கு சம்பள ஒப்பந்தம்

பித்தளை தொழிலாளர்களுக்கு இல்லை

திருப்பூர், ஏப் 4: திருப்பூரில் அனுப்பர்பாளையம், ஆத்துப்பாளையம், தண்ணீர்பந்தல் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் 300க்கும் மேற்பட்ட பாத்திர பட்டறைகளில் 3 ஆயிரத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

இவர்களுக்கான சம்பளம் 3 ஆண்டுக்கு ஒருமுறை பாத்திர உற்பத்தியாளர் சங்கம் மற்றும் தொழிற்சங்கங்களுக்கு இடையே உடன்பாடு ஏற்படுத்தப்படுகிறது. அதன்படி கடந்த டிசம்பர் மாதம் 31ம் தேதியுடன் ஏற்கனவே போடப்பட்ட ஒப்பந்தம் நிறைவு பெற்ற நிலையில் கடந்த 3 மாதங்களாக புதிய சம்பள ஒப்பந்தம் குறித்த பேச்சுவார்த்தை பல கட்டங்களாக நடைபெற்று வந்தது.

அனைத்து தொழிற்சங்க கூட்டு கமிட்டியினர் மற்றும் எவர்சில்வர் பாத்திர உற்பத்தியாளர் சங்க நிர்வாகிகள் கலந்து கொண்ட பேச்சுவார்த்தை தொழிலாளர் துறை உதவி கமிஷனர் பிரேமா முன்னிலையில் நேற்று முன்தினம் நடந்தது. இதில் எவர்சில்வர் பாத்திர உற்பத்தியாளர் சங்கத்தினர் 16% சம்பள உயர்வு தருவதாக அறிவித்தனர். இதனை தொழிற்சங்கத்தினரும் ஏற்றுக்கொண்ட நிலையில் தொழிலாளர் துறை உதவி கமிஷனர் பிரேமா முன்னிலையில் ஒப்பந்தம் கையெழுத்தானது. ஆனால் பித்தளை மற்றும் செம்பு உலோக உற்பத்தியாளர் சங்கங்கள் மற்றும் தொழிற்சங்கத்தினர் இடையே உடன்பாடு எட்டப்படாததால் அடுத்த கட்ட பேச்சுவார்த்தை வரும் 9ம் தேதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

வணிக காஸ் சிலிண்டர் விலையேற்றம் எதிரொலி

பல்லடத்தில் உணவு பொருட்கள் விலை உயர்வு

பல்லடம், ஏப்.4: ஈரான்-அமெரிக்கா, இஸ்ரேல் இடையே நடக்கும் போரால் உலக நாடுகளிடையே பதற்றமான சூழல் நிலவி வருகிறது. இதன் காரணமாக உலகளவில் எரிவாயு விநியோகத்தில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இதனால் இந்தியாவில் வணிக காஸ் சிலிண்டர் விநியோகம் பாதிக்கப்பட்டுள்ளது. மேலும் உணவகங்களுக்கு குறிப்பிட்ட நேரத்தில் காஸ் சிலிண்டர் வழங்க முடியாத நிலையும், விலையும் அதிகரித்துள்ளது. வணிக காஸ் சிலிண்டர் விலையேற்றத்தால் பல்லடம் பகுதியில் உள்ள பெரும்பாலான ஓட்டல்களில் காஸ் சிலிண்டருக்கு பதிலாக விறகு அடுப்புகளை பயன்படுத்தி உணவு வகைகளை தயார் செய்து வருகின்றனர். மேலும், பல ஓட்டல்களில் உணவு வகைகளை குறைத்துள்ளனர். தொடர்ந்து பேக்கரிகளில் ரூ.10க்கு விற்பனை செய்யப்பட்டடீ தற்போது ரூ.15 முதல் ரூ.20 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. இதே போல், பல கடைகளில் ரூ.5க்கு விற்பனை செய்யப்பட்ட வடை, போண்டா ஆகியவற்றின் விலை ரூ.10 முதல் ரூ.15 வரை விற்பனை செய்யப்படுகிறது.

முழு சாப்பாடு தயார் செய்யப்படுவது நிறுத்தப்பட்டு தக்காளி, தயிர், புளி போன்ற கலவை சாதங்கள் மட்டுமே விற்பனை செய்யப்படுகிறது. அவற்றின் விலை ரூ.60க்கு விற்றது தற்போது ரூ.90 ஆக விலை உயர்ந்துள்ளது. இந்த விலையேற்றம் பொதுமக்களை அதிர்ச்சி அடைய வைத்துள்ளது.

மழையால் 'குளு குளு' காலநிலை

சூடு தணிந்ததால் சுற்றுலா பயணிகள் மகிழ்ச்சி

ஊட்டி, ஏப்.4: நீலகிரியில் நேற்று மேக மூட்டம் மற்றும் மழையின் காரணமாக 'குளு குளு' காலநிலை நிலவியதால் சுற்றுலா பயணிகள், பொதுமக்கள் மகிழ்ச்சியடைந்தனர்.

சமவெளிப்பகுதிகளில் இம்முறை வெயிலின் தாக்கம் முன்னதாகவே துவங்கியது. கடந்த ஒரு மாதமாக வெயிலின் தாக்கம் அதிகமாக உள்ளதால், தற்போது வெளி மாவட்டம் மற்றும் வெளி மாநில சுற்றுலா பயணிகள் ஊட்டி வருவது அதிகரித்துள்ளது. சமவெளிப் பகுதிகளில் மட்டுமின்றி, நீலகிரியிலும் கடந்த ஒரு மாதமாக வெயிலின் தாக்கம் அதிகமாக இருந்தது. ஆனால், கடந்த இரு நாட்களுக்கு மேலாக ஊட்டி மற்றும் சுற்றுப்புற பகுதிகளில் மேக மூட்டம் காணப்பட்டது. நேற்று காலை முதல் மேக மூட்டம் காணப்பட்டது. பகல் 1 மணிக்கு மேல் கன மழை பெய்தது. இந்த மழை வெகு நேரம் நீடிக்கவில்லை என்ற போதிலும், சூட்டை தணித்து குளிர்ச்சியை ஏற்படுத்தியது. வெயிலில் வாடி வந்த உள்ளூர் மக்கள் மற்றும் சமவெளிப் பகுதிகளை சேர்ந்த சுற்றுலா பயணிகளுக்கு இந்த காலநிலை மிகவும் குளிர்ச்சியாகவே இருந்தது. ஊட்டி மட்டுமின்றி நீலகிரியில் பெரும்பாலான பகுதிகளில் நேற்று வெயிலின் தாக்கம் சற்று குறைந்தே காணப்பட்டது. படகு இல்லம், தாவரவியல் பூங்கா, பைக்காரா போன்ற பகுதிகளில் மந்தமான காலநிலை மற்றும் லேசான காற்றும் வீசியதால் குளு குளு என இருந்தது. =இந்த காலநிலையை சுற்றுலா பயணிகள் அனுபவித்து சென்றனர். ஊட்டியில் 26 டிகிரி செல்சியசும், குறைந்த பட்சமாக 15 டிகிரி செல்சியசாகவும் வெப்பநிலை பதிவாகியிருந்தது. சமவெளிப்பகுதிகளில் வெயிலின் கொடுமையால் வாடி வந்த சுற்றுலா பயணிகள் ஊட்டியில் 'குளு குளு' காலநிலையை அனுபவித்து வருகின்றனர்.

சொத்து தகராறு காரணமாக

அண்ணன் மனைவிக்கு கொலை மிரட்டல் விடுத்தவர் கைது

கிணத்துக்கடவு, ஏப்.4: சொத்து தகராறு காரணமாக, அண்ணன் மனைவிக்கு கொலை மிரட்டல் விடுத்தவரை போலீசார் கைது செய்தனர்.

நெம்பர் 10 முத்தூரை சேர்ந்தவர் வசந்தாமணி (45), இவரின் கணவர் மாணிக்கம், கடந்த 2 மாதங்களுக்கு முன்பு மாரடைப்பால் இறந்து விட்டதால், தனது மகன்களான நிஷாந்த்குமார் (23), நிதிஷ்குமார் (15) ஆகியோருடன் மூத்த மகன் நிஷாந்த்குமார் (23), இளைய மகன் நிதிஷ்குமார் (15) ஆகியோருடன் வசித்து வருகிறார். இவரின் கணவரின் தந்தையான மருதாச்சலம் என்பவருக்கு 5.25 ஏக்கர் விவசாய நிலம் உள்ளது. இதில் தனக்கு உண்டான பங்கினை பிரித்து கொடுக்குமாறு கேட்டு, கணவரின் தம்பியான கணேசன் (49) அடிக்கடி தகராறு செய்து வந்துள்ளார்.

இந்தநிலையில், நேற்று வசந்தாமணி வேலைக்கு சென்று விட்டு, திரும்பி வந்தபோது, குடி போதையில் அங்கு வந்த கணேசன், கடப்பாரையை கொண்டு, வீட்டின், கதவு, ஜன்னல், கண்ணாடி ஆகியவற்றை உடைத்து, உடனடியாக வீட்டை காலி செய்ய வேண்டும், இல்லாவிட்டால் கொன்று விடுவேன் என்று ஆபாசமாக பேசி, கொலை மிரட்டல் விடுத்ததாக வசந்தாமணி கிணத்துக்கடவு காவல் நிலையத்தில் புகார் அளித்தார். இதுகுறித்து வழக்குப் பதிவு செய்த போலீசார், அண்ணன் மனைவிக்கு கொலை மிரட்டல் விடுத்த கணேசனை கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

தாளவாடியில் அதிகாலையில்

விவசாய நிலத்திற்குள் புகுந்த 4 காட்டு யானைகளால் பரபரப்பு

சத்தியமங்கலம், ஏப். 4: சத்தியமங்கலம் அடுத்துள்ள தாளவாடி பகுதியில் நேற்று அதிகாலையில் விவசாய நிலத்திற்குள் 4 காட்டு யானைகள் புகுந்ததால் பரபரப்பு ஏற்பட்டது

சத்தியமங்கலம் புலிகள் காப்பகத்திற்குட்பட்ட தாளவாடி பகுதியில் கரடி, சிறுத்தை, புலி, யானை போன்ற வனவிலங்குகள் அதிகளவில் உள்ளன. வனப்பகுதியை விட்டு வெளியேறிய வன விலங்குகள் குடியிருப்பு பகுதிக்குள் புகுந்து மனிதர்களை அச்சுறுத்தி வருகின்றன. தற்போது வனப்பகுதியில் வறட்சி நிலவுவதால் தண்ணீரை தேடி வனவிலங்குகள் ஊடுக்குள் படையெடுத்து வருகின்றன.

இந்நிலையில், நேற்று அதிகாலை சிமிட்டஹள்ளி கிராமத்தில் 4 காட்டு யானைகள் அங்குள்ள விவசாய விளை நிலத்திற்குள் புகுந்து பயிறுகளை சேதப்படுத்தியது. காட்டு யானைகள் விவசாய நிலத்திற்குள் நிற்பதை பார்த்த கிராம மக்கள் உடனடியாக ஜீரஹள்ளி வனத்துறை ஊழியர்களுக்கு தகவல் தெரிவித்தனர். அ

தன் பேரில் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த வனத்துறை ஊழியர்கள் காட்டு யானைகளை வனப்பகுதிக்குள் விரட்டும் முயற்சியில் ஈடுபட்டனர். ஆனால், காட்டு யானைகள் வனப்பகுதிக்குள் செல்லாமல் அங்கேயே நின்றிருந்தது.

தொடர்ந்து, நீண்ட நேரம் போராடி வனத்துறையினர் காட்டு யானைகளை வனப்பகுதிக்குள் விரட்டினர். மேலும், வனப்பகுதிக்குள் சென்ற யானைகள் திரும்ப ஊருக்குள் வராதவாறு வனத்துறையினர் அப்பகுதியில் தீவிர பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர்.

▶ விவசாய நிலத்திற்குள் புகுந்த 4 காட்டு யானைகளை வனத்துறையினர் நீண்ட நேரம் போராடி வனப்பகுதிக்குள் விரட்டினர்.

அணைகளின் நீர்மட்டம்



அணை	மொத்த கொள்ளளவு	நீர்மட்டம் அடி	நீர் வரத்து கன அடி	வெளியேற்றம் கனஅடி
சோலையார்	160 அடி	4.16	74.90	5
பரம்பிக்குளம்	72 அடி	50.54	137	1110
ஆழியார்	120 அடி	65.50	431	499
திருமூர்த்தி	60 அடி	46.68	618	115
அமராவதி	90 அடி	36.39	-	70

திமுக கூட்டணிக்கு பனியன் தொமுச ஆதரவு

▶ கோவை திருப்பூர் மாவட்ட பனியன் தொழிலாளர் முன்னேற்ற சங்க செயற்குழு கூட்டம் நேற்று நடந்தது.

திருப்பூர், ஏப் 4: கோவை, திருப்பூர் மாவட்ட பனியன் தொழிலாளர் முன்னேற்ற சங்க செயற்குழு கூட்டம் திருப்பூர் குமரன் சாலையில் உள்ள சங்க அலுவலகத்தில் நடந்தது. சங்கத்தலைவர் பாலசுப்ரமணியன் தலைமை வகித்தார். பொதுச்செயலாளர் ராமகிருஷ்ணன், பொருளாளர் பூபதி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இக்கூட்டத்தில் தமிழ்நாடு சட்டமன்ற தேர்தலில் திருப்பூர் மாவட்டத்தின் 8 சட்டமன்ற தொகுதிகளிலும் திமுக மற்றும் கூட்டணி கட்சிகளின் சார்பில் போட்டியிடக்கூடிய வேட்பாளர்களுக்கு ஆதரவு தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. ஒன்றிய பாஜக அரசின் நடவடிக்கைகளால் இந்தியாவின் மிகப் பெரும் பொருளாதார மையமான பின்னலாடை நகர் திருப்பூரின் தொழில் நலிவு மற்றும் தொழிலாளர்கள் வேலை இழப்பிற்கு காரணமான பாஜக மற்றும் அதனுடன் கூட்டு சேர்ந்துள்ள அதிமுக கூட்டணிக்கு பாடம் புகட்டவே திமுக தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணிக்கு ஆதரவு தெரிவிப்பது என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இதில் சங்க நிர்வாகிகள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

தமிழ்நாடு கிராம வங்கி
அரசுடமை வங்கி
மண்டல அலுவலகம், 1951, PPTS டவர்ஸ், 2வது தளம், ராமநாதபுரம், கோவை - 641 045.

நகை ஏல அறிவிப்பு

திருப்பூர் மாவட்டத்தில் உள்ள கீழ்கண்ட ஊரில் உள்ள எங்களது கிளையில் கீழ்க்கண்ட நபர்கள் தங்க நகைகளை அடமானம் வைத்து கடன் பெற்று இதுநாள் வரை கடனை திருப்பி செலுத்தாமல் சாதாரண மற்றும் பதிவு தபால் மூலமும் இது பற்றி தகவல் தெரிவித்தும் நகைகளை மீட்கவில்லை. ஆகவே இந்த விளம்பரம் கண்டவுடன் அசல், வட்டி, தபால், விளம்பரச் செலவுகள் சேர்த்து பணத்தை செலுத்தி நகைகளை மீட்டுக் கொள்ளவும். தவறும் பட்சத்தில் 24.04.2026 தேதி மதியம் 3.00 மணியளவில் எங்களது வங்கிக் கிளையில் நகை ஏலம் விடப்படும். மனுதாரர் இறந்து இருந்தால் அன்னாரது வாரிசுதாரர்களுக்கும், வெளியூர் மற்றும் வெளிநாடு சென்ற கடன்தாரர்களுக்கும், தபால் கிடைக்க பெறாத நபர்களுக்கும் இந்த அறிவிப்பு பொருந்தும். ஏலத்தொகை கடன் நிலுவை தொகைக்கு குறைவாக இருந்தால் மீதி தொகையை வசூலிக்க சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும். ஏலத்தொகை கடன் நிலுவை தொகையை விட அதிகமாக இருந்தால் கடன்தாரரிடம் திருப்பி அளிக்கப்படும் அல்லது வேறு தவணை தவறிய அவரது கடன்களுக்கு வரவு வைக்கப்படும். ஏலத்தை மறு அறிவிப்பு இன்றி ஒத்தி வைக்கவோ ஏலத்தேதியை மாற்றவோ அல்லது ரத்து செய்யவோ வங்கிக்கு அதிகாரம் உண்டு.

எண்.	கணக்கு எண் மற்றும் கடன் தேதி (DD/MM/YYYY)	பெயர்	கடன் தொகை (ரூ)	மொத்த எடை (கிராமில்)
திருப்பூர் - தாராபுரம் கிளை - 8300077212				
1.	10243956022 - 29.01.2025	சக்திவேல் N	90,000	45.500
திருப்பூர் - தளி கிளை - 8300077132				
1.	10242192475 - 06.01.2025	சிலம்பரசன் C	32,000	8.000

மண்டல மேலாளர், கோயம்புத்தூர்

OMKARA ASSETS RECONSTRUCTION PVT LTD.

ஓம்காரா அசெட்ஸ் ரீகன்ஸ்ட்ரக்சன் பிரைவேட் லிட்.
CIN: U67100TZ2014PTC020363
பதிவு அலுவலகம்: எண்.9, எம்.பி.நகர், முதல் தெரு, கொங்கு நகர் விரிவாக்கம், திருப்பூர்–641607.
கார்பரேட் அலுவலகம்: கோஹினூர் சதுக்கம், 47 ஆவது தளம், என்.சி.கெல்கர் மார்க், ஆர்.ஜி.கட்கரி சௌக், தாதர் (மேற்கு), மும்பை – 400028.
மின்னஞ்சல்: vm.divakaran@omkaraarc.com, தொலைபேசி: 044–24323033
அதிகாரப்பூர்வ அதிகாரி கைபேசி எண்: + 91 – 93446 84194/+ 91 – 98840 62068/ + 91 –99623 33307

[பிற்சேர்க்கை - IV-A]
[விதி 8(6) & 9(1) விதிகளை காணவும்]
அசையா சொத்துகள் விற்பனைக்கான மின்-ஏலம் விற்பனை பொது அறிவிப்பு

பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 (சர்பாசி சட்டம்) கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 8(6) விதிகளுடன் 9(1) கீழ் அசையா சொத்துகள் விற்பனைக்கான மின்–ஏலம் விற்பனை அறிவிப்பு

இதன்மூலம் பொதுவாக பொதுமக்களுக்கும் கடன்தாரர்(கள்) மற்றும் ஜாமீன்தாரர்(கள்) மற்றும் அடமானதாரர்(கள்) ஆகியோருக்கு குறிப்பிட்டும் வழங்கப்படும் அறிவிப்பாவது கீழே விவரிக்கப்பட்ட அசையா சொத்துகள் ஆனது கடனீட்டு கடனீந்தோருக்கு அடமானம் / உரிமை அளிக்கப்பட்டது, ஓம்காரா அசெட்ஸ் ரீகன்ஸ்ட்ரக்சன் பிரைவேட் லிமிடெட் (ஒஏஆர்பிஎல்) அதிகாரப்பூர்வ அதிகாரியால் சுவாதீனம் செய்யப்பட்டிருப்பது. மேற்கொண்டு, ஓம்காரா அசெட்ஸ் ரீகன்ஸ்ட்ரக்சன் பி. லிட்., (ஒஏஆர்பிஎல்) (ஓம்காரா பிஎஸ் 06/2021–22 பொறுப்பாட்சியின் பொறுப்பாளராக அதன் திறனில் செயல்பட்டு) இன்டல்இன்ட் பேங்க் லிமிடெட் (ஐபிஎல்) (உரிமையிந்தோர் வங்கி) வசமிருந்து 25.06.2021 தேதியிட்ட உரிமை ஒதுக்கீடு ஒப்பந்தம் மூலம் உரிமையிந்தோரிடமிருந்து கீழ்க்காணும் கடனீட்டுடன் கடன்களை கைப்பற்றியுள்ளது. அதற்கிணங்க, ஒஏஆர்பிஎல் உரிமையிந்தோரின் கடமைப் பொறுப்புகளை ஏற்றுள்ளது. மேலும் நிலுவைகளை மீட்க மற்றும் கடனீட்டினை அமலாக்கம் செய்ய அதிகாரமளிக்கப் பெற்றுள்ளது. ஒஏஆர்பிஎல் இன் அதிகாரப்பூர்வ அதிகாரி கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடனீட்டுச் சொத்தை கையக சுவாதீனம் செய்துள்ளார். ஒஏஆர்பிஎல் இன் அதிகாரப்பூர்வ அதிகாரி இதன்மூலம் நிலுவைகளை மீட்பதற்காக கீழேக் குறிப்பிட்ட கடனீட்டுச் சொத்தினை விற்பனை செய்ய திட்டமிட்டுள்ளார். கீழ்க்காணும் சம்பந்தப்பட்ட கடன்தாரர்(கள்) மற்றும் உப–கடன்தாரர்(கள்) வசமிருந்து கடனீட்டுக் கடனீந்தோராக ஒஏஆர்பிஎல்–க்குரிய நிலுவை கீழே சம்பந்தப்பட்ட நிரலில் காணும் தொகையை மீட்பதற்காக "உள்ளது உள்ளவிடத்தில்", "உள்ளது உள்ளவாறு", மேலும் "உள்ளது எதுவோ அது" மற்றும் "முறையீடுசாரா அடிப்படை"யில் சர்பாசி சட்டத்தின் பிரிவுகள் 13(2) மற்றும் (4) விதிமுறைகளின் கீழ் உரிமைகள் மற்றும் அதிகாரங்களைப் பயன்படுத்தி சொத்து விற்பனை செய்யப்பட உள்ளது. கடன்தாரர்(கள்)/ ஜாமீன்தாரர்கள்/அடமானதாரர்கள், கடனீடுகள், உரிமையாளர், நிலுவைத்தொகைகள், பிரிவு 13(2) கீழ் அனுப்பிய கோரிக்கை அறிவிப்பு நாள், சுவாதீனம் நாள், நிர்ணய விலை, ஏலம் உயர்த்தும் தொகை, முன்வைப்புத்தொகை (EMD), பார்வையிடும் நாள் & நேரம் ஆகிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளவாறு:

கடன்தாரர் மற்றும் உப கடன்தாரர் பெயர்:	திரு.பிரேம்குமார் R (கடன்தாரர்) திரு.K.ராமச்சந்திரன் & திரு. R.சங்கர் (உப கடன்தாரர்கள்)

கடனீட்டு சொத்தின் விவரங்கள்: சொத்தின் உரிமையாளர் திரு.K.ராமச்சந்திரன், த/பெ,கந்தசாமி செட்டியார், பதிவு செய்யப்பட்ட உயில் ஆவண எண்.BK.III/209/1993, தேதி 30.08.1993, திருப்பூர் இணை சார் பதிவு அலுவலகம். திருப்பூர் பதிவு மாவட்டம், திருப்பூர் இணை 1 சார் பதிவு மாவட்டம், திருப்பூர் வடக்கு வட்டம், தொட்டிபாளையம் கிராமம், S.F.No.47, மண்டலம் 2, அண்ணா தெருவில் உள்ள திருப்பூர் நகர முனிசிபல் கார்ப்பரேஷன், குமாரனந்தபுரம் சென்ட்ரல், கதவு எண்.2,47, எட்டாவது தெரு, கிழக்குப் பக்கத்தில் உள்ள 1207 ½ ச.அடி பரப்பளவு உள்ள அனைத்து துண்டு மற்றும் பகுதி உள்ள சொத்து. எல்லைகள்: வடக்கு: 20 அடி கிழக்கு மேற்கு சாலை; தெற்கு: மல்லி செட்டியாருக்குச் சொந்தமான சொத்து; கிழக்கு: கந்தசாமிக்குச் சொந்தமான சொத்து; மேற்கு: ஜானகி அம்மாளுக்குச் சொந்தமான சொத்து. இதனிடையே அளவீடு: கிழக்கிலிருந்து மேற்காக வடக்குப் பக்கம். 28 ¾ அடி; கிழக்கிலிருந்து மேற்காக தெற்குப் பக்கம். 28 ¾ அடி; வடக்கிலிருந்து தெற்காக கிழக்குப் பக்கம்–42 அடி; வடக்கிலிருந்து தெற்காக மேற்குப் பக்கம்.42 அடி. மொத்தம் 1207 ½ ச.அடி சதுர அடி பரப்பளவு உள்ள நிலத்துடன் கூடிய கட்டிடம் மற்றும் அனைத்து துணைப் பொருள்களும் உள்ள சொத்து.

சொத்தின் உரிமையாளர்	திரு.K.ராமச்சந்திரன், த/பெ,கந்தசாமி செட்டியார்		
13(2) அறிவிப்பு தேதி	கையகச் சுவாதீனம் நாள்	04.04.2026 நாள்படி நிலுவைத்தொகை	
28.02.2022	20.12.2024	ரூ.75,90,187/– (ரூபாய் எழுபத்தைந்து லட்சத்து தொன்னூறு ஆயிரத்து நூற்று எண்பத்தேழு மட்டும்)	
நிர்ணய விலை	நிர்ணய விலையில் 10% முன்வைப்புத் தொகை)	ஏல உயர்வுத் தொகை	சொத்து ஆய்வு தேதி மற்றும் நேரம்
ரூ.61,00,000/– (ரூபாய் அறுபத்தொரு லட்சம் மட்டும்)	ரூ.6,10,000/– (ஆறு லட்சத்து பத்தாயிரம் மட்டும்)	ரூ.40,000/– (ரூபாய் நாற்பதாயிரம் மட்டும்)	அதிகாரப்பூர்வ அதிகாரியின் முன் அனுமதியின்பேரில் மற்றும் மேலே குறிப்பிட்டுள்ள செல்பேசி எண்களில்.
கணக்கு விவரங்கள்	கணக்கு எண்.344905001084, பயனாளரின் பெயர்: ஓம்காரா பிஎஸ் 06/2021–22 ட்ரஸ்ட், வங்கியின் பெயர்: ஐசிஐசிஐ பேங்க், கிளை: பாந்த்ரா (கிழக்கு), மும்பை, IFSC Code:ICIC0003449		
மின் ஏல தேதி மற்றும் நேரம்:	ஏலம் பங்கேற்புக் கடிதம் / KYC ஆவணம் / முன்வைப்புத்தொகை சான்று சமர்ப்பிக்க கடைசி நாள் மற்றும் நேரம்:		
28 ஏப்ரல் 2026 (செவ்வாய்க்கிழமை) முற்பகல் 11.00 முதல் நண்பகல் 12.00 வரை.	24 ஏப்ரல் 2026 பிற்பகல் 04.00 மணிக்கு முன்பாக		

ஏலம் விதிமுறைகள் & நிபந்தனை: விரிவான விற்பனை விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு கடனீட்டுக் கடனீந்தோர் (ஒஏஆர்பிஎல்) இணையதளம் அதாவது http://omkaraarc.com/auction.php அல்லது சேவை வழங்குநர் இணையதளம் அதாவது https://www.bankeauctions.com இல் கொடுக்கப்பட்ட இணைப்பில் சென்று பார்க்கவும்.

கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 இன் விதி 8(6) மற்றும் 9(1) கீழ் விற்பனைக்கான சட்டப்பூர்வ அறிவிப்பு

இந்த அறிவிப்பு மேற்கூறிய கடன் கணக்கின் கடன்தாரர்(கள்) விற்பனை முடிவுறும் முன்பு எந்த நேரத்திலும் இங்கே மேற்குறிப்பிட்ட நிலுவைத்தொகைகளை 05.04.2026 முதலான மேற்கொண்டு வட்டி மற்றும் அனைத்து செலவுகள் கட்டணங்கள் மேலும் செலவினங்களுடன் சேர்த்து செலுத்தி, அவர்கள் விரும்பினால் சொத்துகளை மீட்பதற்குரிய அறிவுறுத்தலுடன் மேற்குறிப்பிட்ட நாள் மற்றும் நேரத்தில் மின்–ஏலம் மூலம் ஏலம்/விற்பனை நடைபெறுவது குறித்து அவர்களுக்கு தெரிவிக்கும், கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதி, 2002 இன் விதி 8(6) மற்றும் 9(1) மேலும் பத்திரமயமாக்கல் & நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 விதிமுறைகளின் கீழ் 15 (பதினைந்து) நாட்களுக்கு குறைவில்லாத ஒரு கட்டாய அறிவிப்பும் ஆகும். ஒருவேளை பணப்பட்டுவாடா செய்யத் தவறினால், சொத்தானது அதிகாரப்பூர்வ அதிகாரி/கடனீட்டுக் கடனீந்தோரின் விருப்ப உரிமையில் கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதி, 2002 இன் விதி 8(5) கீழ் வரையறுக்கப்பட்டவாறு ஏதேனும் முறைகள் மூலம் விற்பனை செய்யப்படும்.

(வி எம் திவாகரன்)
அதிகாரப்பூர்வ அதிகாரி,
கைபேசி எண். 99623 33307
ஓம்காரா அசெட்ஸ் ரீகன்ஸ்ட்ரக்சன் பிரைவேட் லிமிடெட்.
(ஓம்காரா பிஎஸ் 06/2021–22 பொறுப்பாட்சியின் பொறுப்பாளராக அதன் திறனில் செயல்படுகிறது)

நாள்: 4 ஏப்ரல் 2026
இடம்: சென்னை